## 3.25 சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. ஒரு வாத்திற்கு 2 கால்கள் உள்ளன எனில், 9 வாத்துகளுக்கு எத்தனை கால்கள் இருக்கும்?

அ) 12 ஆ) 16 இ) 14 ஈ) 18

2. ஒரு கூடையில் 3 பழங்கள் உள்ளன எனில், 8 கூடைகளில் எத்தனை பழங்கள் இருக்கும்?

அ) 18 ஆ) 21 இ) 24 ஈ) 27

3. ஒரு குதிரைக்கு 4 கால்கள் உள்ளன எனில், 7 குதிரைகளுக்கு எத்தனை கால்கள் இருக்கும்?

அ) 14 ஆ) 20 இ) 24 ஈ) 28

## 3.26 சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. ஒரு பெட்டியில் 5 அழிப்பான்கள் உள்ளன எனில், 7 பெட்டிகளில் எத்தனை அழிப்பான்கள் இருக்கும்?

அ) 25 ஆ) 40 இ) 35 ஈ) 30

2. ஒரு பேருந்தில் 6 சக்கரங்கள் உள்ளன எனில், 9 பேருந்துகளில் எத்தனை சக்கரங்கள் இருக்கும்?

அ) 42 ஆ) 48 இ) 60 ஈ) 54

3. ஒரு வாரத்தில் 7 நாள்கள் உள்ளன எனில், 8 வாரங்களில் எத்தனை நாள்கள் இருக்கும்?

அ) 42 ஆ) 49 இ) 56 ஈ) 63

## 3.27 சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. ஒரு சிலந்திக்கு 8 கால்கள் உள்ளன எனில், 6 சிலந்திகளுக்கு எத்தனை கால்கள் இருக்கும்?

அ) 40 ஆ) 48 இ) 56 ஈ) 64

2. ஒரு பெட்டியில் 9 தேன் பாட்டில்கள் உள்ளன எனில், 8 பெட்டிகளில் எத்தனை தேன் பாட்டில்கள் இருக்கும்?

அ) 54 ஆ) 63 இ) 72 ஈ) 81

3. ஓர் அளவுகோலின் விலை ₹10 எனில், 9 அளவுகோல்களின் விலை என்ன?

அ) ₹70 ஆ) ₹80 இ) ₹90 ஈ) ₹100

LIVEWORKSHEETS